## இராமநாதபுரம் நகராட்சி

இராமநாதபுரம் நகராட்சியில் 2023 ஜீன் மாதத்திற்கான நகர் மன்ற சாதாரண கூட்டம் 28.06.2023–ந் தேதி புதன்கிழமை காலை 10.30 மணிக்கு நகர்மன்றத்தலைவர் இராமநாதபுரம் நகராட்சி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்:-

| | | |
|---|---|---|
| பொருள் எண்..1 | இராமநாதபுரம் நகராட்சி ஆணையாளர் மே 2023–க்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் பதிவு செய்யலாம். | தீர்மான எண்–593<br>பதிவு செய்யப்பட்டது. |
| பொருள் எண்..2 | இராமநாதபுரம் நகராட்சி பொறியாளர் மே 2023–க்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் பதிவு செய்யலாம். | தீர்மான எண்–594<br>பதிவு செய்யப்பட்டது. |
| பொருள் எண்..3 | இராமநாதபுரம் நகராட்சி பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பில், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் 7.10 எம்.எல்.டி கொள்ளவு, கழுகூரணியில் இயக்கி பராமரிக்கப்பட்டு வருகின்றது. இவற்றில் Primary and Secondary Clarifies Unit -ல் அதிகப்படியான கழிவு மண் தேங்கி, சுத்திகரிப்பு நிலையம் முழுவதும் இயக்க முடியாமல் உள்ளது. மேலும் தற்பொழுது தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரிய வழிகாட்டுதலின்படி, ONLINE CONTINUES EFFLUENT MONITORING SYSTEM (OCEMS) FLOW METER பொருத்தி கண்காணிக்கப்படும் நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட Unit -ல் உள்ள (Primary Clasifier Semaly classifier) கழிவு மண்ணை அவசர அவசியம் முன்னிட்டு அள்ளப்பட வேண்டியுள்ளது. எனவே அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.4.50 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – 1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)அவசர அவசியம் முன்னிட்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும், மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1628/2023/இ1–3 | தீர்மான எண்–595<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்..4 | இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட 33 வார்டு பணிகளில் மகளிர் சுய உதவிக்குழு மூலம் 53 டெங்கு தடுப்பு | தீர்மான எண்–596 |

<table>
<tr><td></td><td>பணியாளர்களை கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணியாளர்களின் பணிகள் நகர்மன்ற தீர்மான எண்.564 நாள்.03.05.2022ன்படி 31.05.2023 முடிவடைந்தது. எனவே மேற்படி டெங்கு தடுப்பு பணிகளை 01.06.2023 முதல் 30.07.2023 முறை இரண்டு மாத காலம் நீட்டிக்க கடந்த 24.05.2023 அன்று நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெறப்பட்டது. பின்னேற்பு பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு –1)பொது சுகாதார அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>பதிவு செய்யப்பட்டது. ஒப்புதல் வழங்கப்பட்டது.</td></tr>
<tr><td>பொருள் எண்..5</td><td>இராமநாதபுரம் நகராட்சி பராமரிப்பில் உள்ள புதிய பேருந்து நிலையத்தில் கட்டுமான பணிகள் நடைபெற உள்ளதால் தற்காலிகமாக பழைய பேருந்து நிலையத்தினை பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன்படி பழைய பேருந்து நிலையத்தின் உட்புறம் மழைநீர் தேங்கியும் போக்குவரத்து ஓடுதளம் தாழ்வாகவும் உள்ளது. மேலும் விளக்கு வசதிகளும் இல்லை. எனவே மேற்படி பழைய பேருந்து நிலையத்தில் மராமரத்துப் பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்டவாறு மதிப்பீடு ரூ.45.00 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><table><tr><th>வ.எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்)</th></tr><tr><td>1</td><td>இராமநாதபுரம் நகராட்சி, பழைய பேருந்து நிலையத்தின் ஓடுதளத்தில் கான்கிரீட் மற்றும் மராமரத்து பணிகள் மேற்கொள்ளுதல்</td><td>45.00</td></tr><tr><td colspan="2">மொத்தம்</td><td>45.00</td></tr></table>அலுவலக குறிப்பு – 1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)மேலும் பேருந்து நிலையத்தில் கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதாலும் உடனடியாக தற்காலிக பேருந்து நிலையம் அமைக்க வேண்டி உள்ளதாலும் அவசர அவசியம் முன்னிட்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநகரத்துக்கு கருத்துரு அனுப்பியதற்கும் அதன் தொடர் நடவடிக்கைகளையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1036/2023/இ1</td><td>தீர்மான எண்–597<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

பொருள் எண்..6

இராமநாதபுரம் நகராட்சியில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை அரசுப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்திற்கான உணவு தயாரித்து வழங்கும் பணியினை ரூ.22.50 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.17404/2022/எம்–1,நாள்.28.04.2023ன் படி 31.05.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி இணைய தள வாயிலாக (Online) 31.05.2023ல் கோரப்பட்டதில் மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| | |
|---|---|
| 1) | M/s G.Venkatachalam Works Contract,<br>17/1, Kuppaiahrowther North Street,<br>Ramanathapuram. |
| 2) | M/s Sri Aiswaryaa's Restaurant,<br>483/6A2, ECR Road,<br>Pattinamkathan,<br>Ramanathapuram. |
| 3) | Karishma Trading Corporation<br>32/44, Pulipandiyan Street<br>Jaihindpuram, Madurai-625 011 |

மேற்படி வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளை தொழில் நுட்ப கூர்ந்தாய்வு குழு (Technical Scrutiny Committee) அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டதில் வரிசை எண் 1 மற்றும் 2 –ல் காணும் ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப நிபந்தனைகள் (Technical Cretia) நிறைவு செய்துள்ளதால் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களாக முடிவு செய்து அதற்குரிய Price Bid யினை உரிய தகவல் தெரிவிக்கப்பட்டு 01.06.2023 அன்று திறக்கப்பட்டதில் கீழ்கண்டவாறு விலை விகிதம் பெறப்பட்டுள்ளது.

| வரிசை எண் | வரப்பெற்ற ஒப்பந்ததாரர்களின் பெயர்கள் | மதிப்பீடு (ரூ) | விலை குறைப்பு கடிதம் மூலம் பெறப்பட்ட விலை விகிதம் |
|---|---|---|---|

தீர்மான எண்–598
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>1</td><td>M/s G.Venkatachalam Works Contract,<br>17/1, Kuppaiahrowther North Street,<br>Ramanathapuram.</td><td>22,50,000</td><td>1.96% மதிப்பீட்டு விலையை விட கூடுதல்</td></tr>
<tr><td>2</td><td>M/s Sri Aiswaryaa’s Restaurant,<br>483/6A2, ECR Road,<br>Pattinamkathan,<br>Ramanathapuram.</td><td>22,50,000</td><td>0.39% மதிப்பீட்டு விலையை விட குறைவு</td></tr>
</table>
மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் வழங்கியுள்ள "M/s Sri Aiswaryaa’s Restaurant,483/6A2, ECR Road, Pattinamkathan, Ramanathapuram அவர்களது மதிப்பீட்டினை விட 0.39% குறைவாக உள்ளதை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2)மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண்.(1173/2023/இ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..7</td>
<td>இராமநாதபுரம் நகராட்சி பாதாள சாக்கடை திட்டம் இந்நகரில் ஐந்து மண்டலங்களாக பிரித்து ஐந்து கழிவுநீர் நிலையங்கள் இரண்டு நீர் உந்து நிலையங்கள் அமைக்கப்பட்டு, மின் மோட்டார்கள் மூலம் சுத்திகரிப்பு நிலையத்திற்கு பம்பிங்க் செய்யப்பட்டு வருகிறது. இந்த ஐந்து கழிவுநீர் நிலையங்களிலும் ,மின் மோட்டாரின் திறனுக்கேற்ப ஜெனரேட்டர்கள் பொறுத்தப்பட்டு மின்சாரம் தடைபடும் நேரங்களில், இயக்க வேண்டி உள்ளது. இந்நிலையில் இந்த ஜெனரேட்டர்களுக்கான பேட்டரிகள் (150AH, 12V ) திரும்ப ரீச்சார்ச் செய்து இயக்க இயலாத நிலையில் உள்ளதால், அதற்கான பேட்டரிகள் கீழ்க்கண்டவாறு புதிதாக வாங்கி பொறுத்த வேண்டியுள்ளது.<br>
1. Zone – I சிதம்பரம் பிள்ளை ஊரணி 40KVA GENSET – 1 Battery<br>
2. Zone – II சொக்கலிங்க புரம் 40KVA GENSET – 1 Battery<br>
3. Zone – III காட்டுப்பிள்ளையார் கோவில் தெரு 63 KVA GENSET – 1 Battery<br>
4. Zone – IV இந்திரா நகர் 160 KVA GENSET – 2 Battery
</td>
<td>தீர்மான எண்–599<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | 5. Zone – V நாகநாதபுரம் 125 KVA GENSET – 1 Battery<br>மேற்கண்ட இடங்களில் உள்ள ஜெனரேட்டர்களுக்கு புதிய பேட்டரிகள் (150AH , 12V ) LEAD ACID – 6எண்ணம் வாங்கி பொறுத்த மதிப்பீடு ரூ.1,10,000/–க்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** –1) மன்றம் அனுமதிக்கலாம். | |
| **பொருள் எண்..8** | இராமநாதபுரம் நகராட்சி தற்போது சிறப்பு நிலை நகராட்சியாக உள்ளது. அனைத்து பிரிவுகளிலும் கணிணி பயன்பாடு முக்கியத்துவமாக உள்ள காரணத்தாலும் இந்நகராட்சிக்கு 4 தட்டச்சர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. நமது நகராட்சியில் 4 தட்டச்சர் பணியிடங்களும் காலியாக இருப்பதால் பொது சுகாதார பிரிவிற்கு ஒரு தட்டச்சர் பணியிடம் மட்டும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி ஊதியம் – 611 , EPF (12.5) = ரூ.76.3, ESC (3.25) = ரூ.21.3 = ரூ.708.6/– வீதமும் ஆண்டுக்கு ரூ.2,55,096/– உத்தேச செலவினமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு–1)**மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்–600**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| **பொருள் எண்..9** | இராமநாதபுரம் நகராட்சி குடிநீர் விநியோகம் இந்நகரில் மொத்தம் 30 இடங்களில் சிறுமின் விசை பம்புகள் (Mini Pump) அமைக்கப்பட்டு அந்தந்த பகுதிகளில் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. தற்போது நகரின் பல இடங்களில் மின்விசைப்பம்புகள் மின்மோட்டார் பழுதாகியும், சின்டெக்ஸ், பைப்புகள் மற்றும் போர்கள் பழுதாகி மக்கள் பயன்படுத் இயலாமல் உள்ளது. தற்போது கோடைகாலமாக உள்ளதால் மக்களின் தண்ணீர் தேவையை உடனடியாக சரி செய்து கொடுக்கும் பொருட்டு மோட்டார்கள் மற்றும் இதர பழுதுகள் நீக்கம் செய்து இயக்கி கொடுக்க மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ரூ.3.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மான எண்–601**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| **பொருள் எண்..10** | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் உத்தரவின்படி, இராமநாதபுரம் நகராட்சி அரைக்கும் இயந்திரத்தை பாத்திமா நகர் MCC இருந்து சாயக்கார ஊரணி MCC–க்கு இடமாற்றம் செய்திட சம்பந்தப்பட்ட உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. | **தீர்மான எண்–602**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><th>வ.எண்</th><th>பணிகள்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>செலவு தொகை (ரூ.)</th></tr>
<tr><td>1</td><td>அரைக்கும் இயந்திரம் கிரேன் மற்றும் டிப்பர் வாகனம் பணியாளர்கள் கொண்டு இடமாற்றம் செய்தல்</td><td>AARUDHRA CRANE SERVICE, RAMANATHAPUR AM</td><td>19,800</td></tr>
<tr><td>2</td><td>அரைக்கும் இயந்திரம் கிரேன் மற்றும் டிப்பர் வாகனம் பணியாளர்கள் கொண்டு இடமாற்றம் செய்தல்</td><td>LAKSHMI ENTERPRISER, RAMANATHAPUR AM</td><td>21,000</td></tr>
</table>
மேற்காணும் விலைப்புள்ளிகளுக்கு இந்நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு குறைவான விலை விகிதத்தில் வழங்கிய AARUDHRA CRANE SERVICE, RAMANATHAPURAM நிறுவனத்திற்கு உத்திரவு வழங்கப்பட்டது. அதற்கான உத்தேச செலவின தொகை ரூ.19,800/-யை வழங்க அனுமதிக்கலாம்.<br>
அலுவலக குறிப்பு - மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..11</td>
<td>இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பில் வார்டு எண்.14 முத்துக் கோரக்கி செட்டிய தெரு மற்றும் வார்டு -15 சாயக்காரத் தெருவில் ஆய்வுக் குழியில் இருந்து அடிக்கடி கழிவு நீர் வெளியேறி பெரும் பொது சுகாதார பிரச்சினை ஏற்படுகின்றது. அதற்கு மாற்று ஏற்பாடாக அருகில் உள்ள ஆய்வுக்குழிக்கு Bypass குழாய் பதிக்க வேண்டும். மேலும் அண்ணா நகர் கழிவு நீர் அகற்றும் நிலையத்தில் Grane மற்றும் ஆட்கள் அமர்த்தி மின்மோட்டார் பழுது மற்றும் மராமத்து பணிகள் பார்க்கப்பட வேண்டும். மேலும் பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பில் Zone-II ல் இருந்து Zone -IIIக்கு செல்லும் பிரதான கழிவு நீர் குழாயில் சாலைத்தெரு பெரியார் ஸ்தூபி அருகில் கழிவு நீர் வெளியேறுவதற்கு அவ்விடத்தில் ஒரு Champer தொட்டி அமைத்து குழாய் பதித்து மாற்று ஏற்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளுவதற்கான உத்தேச செலவினம் ரூ.1.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு -1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2)பாதாள சாக்கடை பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர்</td>
<td>தீர்மான எண்-603<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி, மேல் நடவடிக்கை மேற்கொண்டதனையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2299/2023/இ1 | |
| **பொருள் எண்..12** | இராமநாதபுரம் நகராட்சி கலவை உரக்கிடங்கில் குவிந்துள்ள குப்பைகளை கையாள்வதற்கு நகர் பகுதிகளில் மேடு பள்ளங்களை சரிசெய்தல், செடி கொடிகளை அகற்றுதல், நீர் நிலைகளில் உள்ள கருவேல மரங்களை அகற்றுதல் போன்ற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் பொக்லைன் வாகனத்தை இயக்குவதற்கு ஓட்டுநர் இல்லாத காரணத்தினால் பொது சுகாதார பணிகளில் தேக்கநிலை உள்ளது. எனவே, பொது சுகாதார அவசியம் கருதி இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரின் ஊதிய விகிதத்தின்படி ஒரு வருட காலத்திற்கு பணி மேற்கொள்ள உத்தேச செலவினம் கீழ்க்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.<br>ஓட்டுநர் நாள் ஒன்றுக்கு ஊதியம் – ரூ.614/–<br>EPF (12%) – ரூ.73.68<br>ESI (4.75) – ரூ.29.17<br>**மொத்தம் – ரூ.716.85**<br>மேற்காணும் ஒரு வருட காலத்திற்கு ரூ.2,61,650/– உத்தேச செலவினமாக கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்–604<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| **பொருள் எண்..13** | இாமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை திட்டம் பராமரிப்பில் சிங்காரத்தோப்பு கழிவுநீர் அகற்றும் நிலையத்தில் இருந்து, குண்டூரணி (காட்டுப்பிள்ளையார் கோவில்) வரை செல்லும் பிரதான கழிவுநீர் குழாய் தினகர் ராஜா பள்ளி அருகில் உடைந்து விட்டது. ஏற்கனவே உடைப்பு ஏற்பட்ட குழாயின் உட்பக்கம், அடுத்து பழுதடைந்த இரண்டு குழாய்கள் உடைந்து கழிவுநீர் வெளியேறுகின்றது. அதனை உடனடியாக MIld Steel Borewell பைப்பாக பழுதுநீக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.<br>இதனால் Zone–I மற்றும் Zone–II–ல் உள்ள கழிவுநீர் முழுவதும் வெளியேற்றம் செய்யாமல் உள்ளது. இதனால் பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. எனவே அவசர அவசியம் முன்னிட்டு | **தீர்மான எண்–605<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| | இப்பணியினை மேற்கொள்ள அதற்கான மதிப்பீடு ரூ. 5.25 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)பாதாள சாக்கடை பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி, மேல் நடவடிக்கை மேற்கொண்டதனையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2300/2023/இ1 | |
| பொருள் எண்..14 | இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பில், இந்திரா நகரில் இருந்து கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைத்திற்கு செல்லும் பிரதான கழிவுநீர் குழாய் காட்டூரணி (பழைய நகராட்சி பம்ப் அறை எதிர்புறம்) திடீரென உடைந்து விட்டது. இதனால் நகரின் அனைத்து இடங்களிலும் கழிவுநீர் பம்பிங் செய்ய இயலவில்லை. இதனை உடனடியாக பழுதுநீக்கம் செய்யப்பட வேண்டும். பழுதாகியுள்ள 450mm Psc குழாயினை MS Bore well பைப்பாக மாற்றம் செய்து பழுது நீக்கம் செய்யப்பட வேண்டும். அவசர அவசியம் முன்னிட்டு பணிகளை மேற்கொள்ளுவதற்கும், அதற்கான மதிப்பீடு ரூ.6.10 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)பாதாள சாக்கடை பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை மேற்கொண்டதனையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2298/2023/இ1 | தீர்மான எண்–606<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்..15 | இராமநாதபுரம் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பில், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் Primary and Secondary Clarifies Unit -ல் கழிவு மண்ணை அள்ளும் பணிக்கு மதிப்பீடு ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி நாள்.04.05.2023ல் ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 12.06.2023ல் கோரப்பட்டதில் இரண்டு | தீர்மான எண்–607<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு வரப்பட்டன.<br><br>
<table>
<tr><th>வ.எண்</th><th>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர்கள்</th><th>விலை விகிதம் கூடுதல் /குறைவு</th></tr>
<tr><td>1.</td><td>M/s Tamil Nadu Water Supply and Drainage System<br>Rasipuram.</td><td>0.17 %சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>M/s JP Construction<br>Nammakkal</td><td>0.57% சதவீதம் மதிப்பீட்டை விட கூடுதல்</td></tr>
</table>
மேற்கண்ட<br><br>
ஒப்பந்தப்புள்ளிகளில், குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் வழங்கியுள்ள "M/s Tamil Nadu Water Supply and Drainage System Rasipuram.அவர்களது 0.17 % குறைவாக உள்ளதை மன்றம் ஏற்கலாம்.<br>
அலுவலக குறிப்பு–1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2) அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..16</td>
<td>இராமநாதபுரம் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பில், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் Primary and Secondary Clarifies Unit -IIல் கழிவு மண்ணை அள்ளும் பணிக்கு மதிப்பீடு ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மானம் எண்.560 நாள்31.05.2023ல் ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 12.06.2023ல் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு வரப்பட்டன.</td>
<td>தீர்மான எண்–608<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| வ.எண் | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர்கள் | விலை விகிதம் கூடுதல் /குறைவு |
|---|---|---|
| 1. | M/s Tamil Nadu Water Supply and Drainage System Rasipuram. | 0.17 %சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | M/s JP Construction Nammakkal | 0.57% சதவீதம் மதிப்பீட்டை விட கூடுதல் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில், குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் வழங்கியுள்ள "M/s Tamil Nadu Water Supply and Drainage System, Rasipuram அவர்களது 0.17 % குறைவாக உள்ளதை மன்றம் ஏற்கலாம்.

அலுவலக குறிப்பு–1)மன்றம் அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்..17**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை நிலை எண்.166, நாள்:23.11.2016 நகராட்சி எல்லைக்குள் உள்ள அரசு மற்றும் நகராட்சி பள்ளி கழிப்பறைகள் மற்றும் வளாகத்தினை தனியார் மயம் மூலம் சுத்தம் செய்திடவும் அதற்கான நிதியினை (Educational Cess) கல்வி வரியின் மூலம் வழங்கிடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி நமது நகராட்சி பகுதிக்குள் இயங்கிவரும் அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளுக்கு கீழ்க்கண்டவாறு அரசாணையின்படி பணியாளர்கள் தேவைப்படுகிறது.

| **வ.எண்** | **பள்ளியின் பெயர்** | **தேவைப்படும் பணியாளர்கள்** |
|---|---|---|
| 1 | அறிஞர் அண்ணா நடுநிலைப்பள்ளி | 2 பணியாளர்கள் |
| 2 | வள்ளல்பாரி நகராட்சி | 2 பணியாளர்கள் |

**தீர்மான எண்–609**
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>நடுநிலைப்பள்ளி</td><td></td></tr>
<tr><td>3</td><td>MSK ஆரம்பப்பள்ளி</td><td>2 பணியாளர்கள்</td></tr>
<tr><td>4</td><td>நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளி</td><td>3 பெண் பணியாளர்கள்</td></tr>
<tr><td></td><td>தேவைப்படும் மொத்தம்</td><td>9 பணியாளர்கள்</td></tr>
</table>
<br>
ஒரு பணியாளருக்கு நாள் ஒன்றிற்கு ஆகும் செலவினம் – மாவட்ட ஆட்சியர் அவர்களின் தினக்கூலி – ரூ.431/–<br>
EPF (13%) – ரூ.56.03/–<br>
ESI (3.25%) – ரூ.14.00/–<br>
நிர்வாக செலிவனம் (5%) – ரூ.21.55/–<br>
ஒரு நபருக்கு ஆகும் செலவினம் (431 + 91.61) – ரூ.522.6/–<br>
தினசரி 9 நபர்களுக்கு ஆகும் செலிவினம் (9X522) – ரூ.4698/–<br>
ஒரு மாதத்திற்கு ஆகும் செலவினங்கள் (31X4698) – ரூ.1,45,638/–<br>
<br>
மேற்காணும் விடுமுறை நாட்கள் நீங்கலாக ஓராண்டிற்கு ஒப்பந்தபுள்ளி கோரி பணி மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.15,00,000/–த்திற்கு அனுமதிக்க மன்றப் பொருள் வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..18</td>
<td>இராமநாதபுரம் நகராட்சியில் தூய்மை இந்தியா 2.0 திட்டத்தின் கீழ் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் DECANTING STATION கட்டும் பணிக்கு ரூ.16.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களது கடிதம் எண் ந.க.எண்.1342/2023/B2, நாள் 30.05.2023–ன் படி நிர்வாக அனுமதி</td>
<td>தீர்மான எண்–610<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

(Administrtive Sacnction) வழங்கப்பட்டுள்ளது.

இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி இரு உறை முறையில் (Two Cover System) 16.06.2023 அன்று இணையதள வாயிலாக கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் இப்பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப உறை (Technical Bid) திறக்கப்பட்டு தகுதியுள்ள ஒப்பந்ததாரர்களை தேர்வு செய்து இறுதி செய்ய 15.06.2023–ம் அன்று திறனாய்வு குழு அலுவலர்கள் நியமனம் செய்து உத்திரவிடப்பட்டது.

மேற்கண்ட திறனாய்வு குழு அலுவலரர்களால் ஒப்பந்தப்புள்ளி இணையவாயிலாக திறக்கப்பட்டு கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப நிபந்தனைகள் (Technical Cretia) நிறைவு செய்துள்ளதால் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களாக முடிவு செய்து அதற்குரிய Price Bid –யினை உரிய தகவல் தெரிவிக்கப்பட்டு 20.06.2023 திறக்கப்பட்டதில் கீழ்கண்டவாறு விலை விகிதம் பெறப்பட்டுள்ளது.

| வரிசை எண் | வரப்பெற்ற ஒப்பந்ததாரர்களின் பெயர்கள் | மதிப்பீடு (ரூ) | விலை விகிதம் கூடுதல்/குறைவு |
|---|---|---|---|
| 1 | M/sஜீவானந்தம் கன்ஸ்ட்ரக்சன் ஒப்பந்ததாரர் இராமநாதபுரம். | 16,00,000/– | 0.08 % சதவிகிதம் மதிப்பீட்டினை விட குறைவு |
| 2 | திரு.ஆர்.எஸ்.ராமமூர்த்தி ஒப்பந்தாரர் இராமநாதபுரம். | 16,00,000/– | 6.50 % சதவிகிதம் மதிப்பீட்டினை விட அதிகம் |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் வழங்கியுள்ள "M/s ஜீவானந்தம் கன்ஸ்ட்ரக்சன், இராமநாதபுரம் " அவர்களது மதிப்பீட்டினை விட 0.08% குறைவாக உள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணி திட்டப்பணியாதலால் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| | ந.க.எண்.3251/2022/இ1 | |
| **பொருள் எண்..19** | இராமநாதபுரம் நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையத்தில் பொது மக்கள் பயன்பாட்டிற்காக ஏற்கனவே இருந்து வந்த கட்டண கழிப்பறை பழுதடைந்து மிகவும் மோசமாக இருந்த காரணத்தினால் அதற்கு பதிலாக புதியதாக கட்டப்பட்டுள்ள கட்டண கழிப்பறை நல்ல நிலையில் உள்ளதாகவும் ஏல நடவடிக்கை மேற்கொள்ளலாம் என இந்நகராட்சி பொறியியல் பிரிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே ஏற்கனவே செயல்பட்டு வந்த கட்டண கழிப்பறையை ஏல கேட்பிலிருந்து நீக்கம் செய்யவும் புதியதாக கட்டப்பட்டுள்ள கட்டண கழிப்பறையை மூன்றாண்டு கால தொகுப்பிற்கு ஏல மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு–** இந்நகராட்சிக்கு வருவாய் ஈட்டும் பொருட்டு மேற்காணும் குத்தகை இனத்தை மூன்றாண்டு கால தொகுப்பிற்கு ஏல நடவடிக்கை மேற்கொள்ளவும் பழைய பழுதடைந்த கட்டண கழிப்பறையை கேட்பிலிருந்து நீக்கம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம் . | **தீர்மான எண்–611**<br>**அலுவலக குறிப்பு**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| **பொருள் எண்..20** | இாமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பில் கழிவுநீர் அகற்றும் நிலையங்களில், மின் மோட்டாரினை இயக்கவும், பராமரிப்பு பணிகள் மற்றும் காவலர் பணியாளர்கள் இல்லாததால் ஒப்பந்த அடிப்படையில் தனியார் வெளிக்காணர்வு (Outsourcing) மூலம் 14 நபர்களை மூன்று மாதத்திற்கு அமர்த்தி பராமரிப்பு பணி மேற்கொள்ள ரூ.9.30 இலட்சம் மதிப்பீட்டிற்கு மன்றம் தனது தீர்மான எண்.497, நாள் : 06.04.2023–ன் படி ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது.<br>இப்பணியின் ஒப்பந்த காலம் 07.07.2023 அன்று முடிவு பெற உள்ளது. மேலும், பாதாள சாக்கடை பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால், இப்பணியினை மேலும் இரண்டு மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து மதிப்பீடு ரூ.6.60 இலட்சத்திற்கு இதே ஒப்பந்தபுள்ளி விலை விகிதத்தில், இப்பணியின் ஒப்பந்ததாரர் திரு.P.சுப்பிரமணி, இராமநாதபுரம் மூலம் பணி மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்–612**<br>**அலுவலக குறிப்பு**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| **பொருள் எண்..21** | இாமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பில் கழிவுநீர் அகற்றும் செயல்படும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் மின் மோட்டாரினை இயக்கவும், காவலர் பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் மின் பணியினை கண்காணிக்கவும் போதிய பணியாளர்கள் இல்லாததால் ஒப்பந்த அடிப்படையில் தனியார் | **தீர்மான எண்–613**<br>**அலுவலக குறிப்பு**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| | வெளிக்காணர்வு (Outsourcing) மூலம் பணியாளர்களை இரண்டு மாதத்திற்கு அமர்த்தி பராமரிப்பு பணி மேற்கொள்ள ரூ5.90 இலட்சம் மதிப்பீட்டிற்கு மன்றம் தனது தீர்மான எண்.498, நாள்: 06.04.2023–ன் படி அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.<br>இப்பணியின் ஒப்பந்த காலம் 07.07.2023 அன்று முடிவு பெற உள்ளது. மேலும், பாதாள சாக்கடை பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால், இப்பணியினை மேலும் இரண்டு மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து மதிப்பீடு ரூ.4.15 இலட்சத்திற்கு இதே ஒப்பந்தபுள்ளி விலை விகிதத்தில், இப்பணியின் ஒப்பந்ததாரர் திரு.P.சுப்பிரமணி, இராமநாதபுரம் மூலம் பணி மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம். | |
| **பொருள் எண்..22** | இாமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பில் ஏற்படும் அடைப்புகளை Jet rodding Machine பயன்படுத்தி, அடைப்பு நீக்கும் பணி மேற்கொள்ளவும் மற்றும் Robotic எந்திரம் பயன்படுத்தி கழிவு மண்ணை அள்ளி அப்புறப்படுத்தும் பணிக்கும், போதிய பணியாளர்கள் இல்லாததால் தனியார் வெளிக்காணர்வு (Outsourcing) மூலம் 13 நபர்கள் மூன்று மாதத்திற்கு அமர்த்திக்கொள்ள ரூ.8.70 இலட்சத்தில் மன்றம் தனது தீர்மான எண்.499, நாள் : 06.04.2023–ன் படிஅனுமதி அளிக்கப்பட்டுள்ளது.<br>இப்பணியின் ஒப்பந்த காலம் 07.07.2023 அன்று முடிவு பெற உள்ளது. மேலும், பாதாள சாக்கடை பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால், இப்பணியினை மேலும் இரண்டு மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து மதிப்பீடு ரூ.6.15 இலட்சத்திற்கு இதே ஒப்பந்தபுள்ளி விலை விகிதத்தில், இப்பணியின் ஒப்பந்ததாரர் திரு.P.சுப்பிரமணி, இராமநாதபுரம் மூலம் பணி மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்–614**<br>**அலுவலக குறிப்பு**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| **பொருள் எண்..23** | இராமநாதபுரம் நகராட்சியில் பொறியியல் பிரிவில் நடைப்பெற்று வரும் திட்டப்பணிகள் மற்றும் பொது நிதிப்பணிகளை மேற்பார்வையிடவும் திட்டப்பணிகளுக்கான மதிப்பீடு தயார் செய்யவும் முடிவுற்றப் பணிகளுக்கு, பணிமுடிவறிக்கை தயார்செய்யவும் தினசரிக் கேட்கப்படும் அறிக்கைகளைத் தயார்செய்து மின்னஞ்சல் வாயிலாகச் சமர்ப்பிக்கவும் பொறியியல் பிரிவில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் தனியார் தொழில்நுட்ப பணியாளர் ஒருவரைத் தினக்கூலி அடிப்படையில் ஒப்பந்தக்காரர் மூலம் பணி மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.2,21,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | **தீர்மான எண்–615**<br>**அலுவலக குறிப்பு**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| | அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம். | |
| பொருள் எண்..24 | இந்நகராட்சியில் வார்டு எண்–26ல் பெரியார் நகர் பகுதியில் அமைந்து உள்ள துய்மை பணியாளர்கள் குடியிருப்புகளில் நடைமுறையில் உள்ள பாதாள சாக்கடை பைப்புகள் மற்றும் Chamber மிகவும் பழுதடைந்து நிலையில் உடைந்து காணப்படுகிறது. இதன் காரணமாக குடியிருப்பு சுற்றிலும் கழிவு நீர் வெளியே செல்ல முடியாமல் தேங்கி மக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது. எனவே மேற்கண்ட இடங்களில் பழுதடைந்த பாதாள சாக்கடை பைப்புகள் புதியதாக மாற்றி அமைக்கும் பணிமேற்கொள்வதும் மற்றும் குடியிருப்புகளில் சில மராமத்து பணிகளும் மேற்கொள்வதும் அவசியமாகிறது. எனவே இப்பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1.25 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்–616<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்..25 | இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையம் தற்போது இடிக்கப்பட்டு புதிய பேருந்து நிலையம் மற்றும் வணிக வளாகம் கட்டும் பணி தொடங்க உள்ளது. மேற்கண்ட பேருந்து நிலையத்தில் 56 கடைகள் மாதாந்திர அப்படையில் வாடகைக்கு விடப்பட்டு செயல்பட்டு வருகிறது. இராமநாதபுரம் உள்ளாட்சி கடை வியாபாரிகள் பொது நலச்சங்கம் மற்றும் இராமநாதபுரம் நகராட்சி கடை உரிமையாளர்கள் நலச் சங்கத்தின் தலைவர் தனது 23.06.2023– ந் தேதிய விண்ணபத்தில் நாங்கள் 33 ஆண்டுகளாக கடை வைத்து 200 குடும்பங்கள் வாழ்ந்து வருகிறோம் என்றும் இந்நிலையில் புதிய பேருந்து நிலையத்தை இடித்துவிட்டு புதிய கட்டுமான பணி ஆரம்பிப்பதால் எங்களது குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கும் நிலையில் உள்ளது எனவே எங்களுடைய வாழ்வாதாரத்தை கருத்திற் கொண்டும் தற்காலிகமாக செயல்பட உள்ள பழைய பேருந்து நிலையத்தில் பதிவு பெற்ற உள்ளாட்சி கடை வியாபார சங்கத்திற்கு இடம் ஒதுக்கீடு செய்து தருமாறு கோரிக்கை வைத்துள்ளனர்.<br><br>மேற்கண்ட வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை கருத்திற் கொண்டும் தற்காலிக பேருந்து நிலையத்திற்கு வருகை தரும் பொதுமக்களின் அத்தியவாசிய தேவைகளை கருத்திற்கொண்டு இந்நகராட்சி நிர்ணயிக்கும் வாடகையை செலுத்த வேண்டும் என நிபந்தனைகளுடன் மேற்க்காணும் சங்கத்திற்கு தற்காலிக கடைகள் அமைத்து கொள்வதற்கு அனுமதி வழங்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது<br><br>**<u>அலுவலக குறிப்பு–</u>** இராமநாதபுரம் நகராட்சி கடை உரிமையாளர்கள் நலச் சங்கம் கோரிக்கையின் அடிப்படையில் வியாபாரிகளின் | தீர்மான எண்–617<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | வாழ்வாதாரத்தை கருத்திற் கொண்டு பழைய பேருந்து நிலையத்தில் தற்காலிகமாக கடை அமைத்து வியாபாரம் செய்ய சிறப்பினம் கருதி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகளை தவிர்த்து மேற்காணும் வியாபாரிகள் சங்கத்திற்கு தற்காலிமாக கடை அமைப்பதற்கு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. | |
| **பொருள் எண்..26** | இராமநாதபுரம் நகராட்சி, வெளிப்பட்டிணம் நகர்நல மையம் மிகவும் பழுதடைந்துள்ளதால் அதனை இடித்து அப்புறப்படுத்திட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களது செயல்முறை கடித ந.க.எண்.6291/2022/B2 நாள்.07.03.2023ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது.<br>அதன் பொருட்டு அந்த பழைய கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்துவதற்கு நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று 16.06.2023ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மதிப்பீட்டினை விட அதிகமான தொகை ரூ.69,000/– வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.என்.இளவரசன், அவர்களால் கொடுக்கப்பட்டு தொகை செலுத்தியன் பேரில் அவசர அவசியம் முன்னிட்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கப்பட்டது. பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்–618**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| **பொருள் எண்..27** | இராமநாதபுரம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தினை மேம்படுத்தும் பொருட்டு அதனை இடித்துவிட்டு புதிய கட்டிடம் கட்ட உள்ளதால் பொதுமக்களின் நலன் கருதி புதிய கட்டிடம் கட்டும் வரை தற்காலிக பேருந்து நிலையம் அமைப்பது அவசியமாகிறது. தற்போது தற்காலிக பேருந்து நிலையத்திற்காக பழைய பேருந்து நிலையம் தேர்வு செய்யப்பட்டு பராமரிப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. தற்காலிக பேருந்து நிலையம் அமையவுள்ள இடத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் இரமநாதபுரம் நகராட்சி நகர்மன்றத் தலைவர் முன்னிலையில் வருவாய் கோட்டாட்சியர், நகராட்சி ஆணையர் மண்டல போக்குவரத்து அலுவலர், மற்றும் வட்டாட்சியர் உள்ளிட்ட அலுவலர்கள் கடந்த 26.06.2023ம் தேதி அன்று இடங்களை ஆய்வு செய்ததில் பழைய பேருந்து நிலையம் இடம் தற்போது உள்ள பேருந்துகளுக்கு போதுமானதாக இல்லாததால் மதுரை, இராமேஸ்வரம் மற்றும் வெளியூர் செல்லும் பேருந்துகளுக்கான கூடுதல் தற்காலிக பேருந்து நிலையம் அமைக்கக் கோரி மண்டல போக்குவரத்து அலுவலர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் | **தீர்மான எண்–619**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான இராமநாதபுரம், மூலக்கொத்தளம், வருவாய் வார்டு –B, பிளாக் எண்–3 நகரபுல எண்–7/1A1A வலது பக்கம் உள்ள 177'X151' மொத்தம் 26,727 ச.அடி அளவில் காலியாக உள்ள இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.<br>எனவே, புதிய பேருந்து நிலையம் கட்டிடம் கட்டி முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வரும் வரை மேற்குறிப்பிட்டுள்ள இடத்தினை தற்காலிக பேருந்து நிலையம் அமைப்பதற்கு ஏதுவாக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினால் நிர்ணயிக்கப்படும் கட்டணங்கள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி பெற திட்டப் பிரேரனை அனுப்பிட மன்றம் அனுமதிக்கலாம்.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம். | |

(ஒப்பம்) கு.கார்மேகம்,
நகர்மன்றத்தலைவர்,
இராமநாதபுரம் நகராட்சி.